**SC.NO. 137/2022** **Date: 09.04.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் ) சாட்சியாகிய திருமதி.கவிதா என்ற **Pw2** நபரின் வாக்குமூலம் (**1876ம்** ஆண்டின் **10** விதியின்) **Tr.A.Pachaiyappan, Junior Assistant**, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் – திருமதி.கவிதா
க/பெ – பாபு
வயது – 50/2026
தொழில் – கூலி வேலை

**முதல் விசாரணை**

நான் மதுராந்தகம் வட்டம் சிதண்டி கிராமம் வசித்து வருகிற கிராமத்தில் வசித்து வருகிறேன் நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது மகளின் பெயர் ஜமுனா ராணி. எனது மகளை புளியம்பாக்கத்தில் உள்ள கண்ணன் என்பவருக்கு திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின் போது என் மகளுக்கு 10 சவரன் நகையும் வண்டி மற்றும் சாமான்கள் வாங்கிக் கொடுத்தோம். அவர்களுக்கு 2014 ஆம் ஆண்டு திருமணமானது அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. எனது மகளிடம் எனது மருமகன் உங்கள் வீட்டில் ஓட்ட நகைகள் பத்தவில்லை என்றும் மேலும் நகைகளை வாங்கிட்டு வா என்று என்றும் பணத்தை வாங்கிட்டு வா என்றும் அடிக்கடி சண்டை போட்டு எனது மகளை என் வீட்டிற்கு அனுப்பி விடுவார். நான் அவர்களை சமாதானம் செய்து நல்லபடியாக குடும்பம் நடத்தும் படி அறிவுரை கூறிய அனுப்புவேன் . மூன்று மாதங்கள் கழித்து ஒரு நாள் இரவு எனது மகளுக்கு மருமகன்களுக்கும் அதிக சண்டை ஏற்பட்டு

எனது மருமகன் அவளை அடித்துள்ளார் நாங்கள் குழந்தை பார்ப்பதற்காக அவர்கள் வீட்டுக்கு செல்லும்போது எனது மகள் நடந்ததை கூறினார். நாங்கள் இது குறித்து அவர்களிடம் பேசுவதற்காக அவர்கள் வீட்டிற்கு சென்று செல்லும் போது சுரேஷ் யுவராஜ் கண்ணன் ஆகியோர் என்னையும் எனது கணவரையும் அடித்து அனுப்பி விட்டார்கள் அதன் பிறகு நாங்கள் அங்கு செல்லவில்லை. எனது கணவர் தான் நான் சென்னையில் வேலையில் இருந்தபோது எனக்கு தகவல் சொன்னார். நான் தகவல் கிடைத்து ஐந்து மணிக்கு எனது மகள் வீடான புளியம்பாக்கத்தில் வந்து எனது மகளை பார்த்த போது அவள் இறந்து போயிருந்தாள் அவர் கயிற்றில் இருக்குமான தழும்பு இருந்ததை பார்த்து அவரது இறப்பில் சந்தேகம் என்று வாலாஜாபாத் காவல் நிலையத்தில் நானும் எனது கணவரும் சென்று எனது கணவர் புகார் கொடுத்தார். எனது கூட வந்தவர் நாங்கள் சொன்னதை புகாராக எழுதிக் கொடுத்தார். போலீசார் எனது மகளின் பிரேதத்தை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று விட்டார்கள். மறுநாள் எனது மகளின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து என்னிடம் ஒப்படைத்தார்கள். மூன்று மாதம் கழித்து காஞ்சிபுரம் ஆர் டி ஓ அலுவலகத்தில் என்னையும் எனது கணவரையும் விசாரித்தார்கள் நான் நடந்ததை கூறினேன். இது குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் விபரங்கள் என் கணவர் பாபு தொலைபேசியில் சொன்னதின் பெயரில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி கண்ணனும் எனது மகளும் நன்றாக தான் வாழ்ந்து வந்தார்கள் என்று என்றாலும் எதிரிக்கும் எனது மகளின் இறப்புக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் எதிரியை இவ்வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவும் பொய்யாக வழக்கு பதிவு செய்து தற்போது சாட்சி மளிக்கிறேன் என்று என்றாலும் சரியல்ல. எனது மகளின் இறப்பிற்கு அவர்தான் காரணம்.

**SC.NO. 137/2022** **Date: 09.04.2026**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் ) சாட்சியாகிய திரு.பாபு என்ற **Pw1** நபரின் வாக்குமூலம் (**1876ம்** ஆண்டின் **10** விதியின்) **Tr.A.Pachaiyappan, Junior Assistant**, அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் – திரு. பாபு
த/பெ – படவேட்டான்
வயது – 55/2026
தொழில் – விவசாயம்

**முதல் விசாரணை**

நான் மதுராந்தகம் வட்டம் சிதன்டி கிராமம், விச்சுர் அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வருகிறேன் விவசாயம் தொழில் செய்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர், எனது மகளின் பெயர் ஜமுனா ராணி. 2014ல் புளியம்பாக்கம் கிராமத்தில் உள்ள அமுல் என்பவரின் மகள் கண்ணன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தேன். திருமணம் பிறகு சில காலம் வாழ்ந்து வந்தார்கள். திருமணத்தின் போது மாப்பிள்ளைக்கு ஒரு சவரன் நகையும் பெண்ணிற்கு 11 சவரன் நகையும்மற்ற சீர் வரிசை சாமான்களையும் கொடுத்தேன் ஆனால் அதன்பிறகு அதை கொண்டு வா இதை கொண்டு வா என்றும் அடிக்கடி வரதட்சனை கொடுமை செய்து சண்டை போட்டு என் எங்கள் மகள் எங்கள் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள் அப்படி வந்தவரை நான் சமாதானப்படுத்தி தனி கொடுக்கணும் செய்யும்படி பேசிவிட்டு வந்தேன் பேசிவிட்டு வந்து இரண்டு மூன்று நாட்கள் கழித்து

மீண்டும் எனது மகள் எனது வீட்டிற்கு வந்து விட்டால் மீண்டும் வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தி என்னை சண்டை போட்டு வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள் என்று என் மகள் சொன்னார். அதன்பிறகு நான் பெண்ணின் என் பெண்ணே வீட்டிற்கு சென்று புளியம்பாக்கத்தில் எனது உறவினர்களுடன் சென்று சமாதானம் பேச சென்றேன் . நான் அவர்கள் வீட்டின் வெளியே தெருவில் நின்று சமாதானம் பேசினேன். அப்போது அமுல் யுவராஜ் சுரேஷ் கண்ணன் ஆகியோர் என்னை கழுதை பிடித்து வெளியே தள்ளி அடித்து வெளியே தள்ளி விட்டார்கள். நான் எனது மகள் வாழ வேண்டும் என்பதற்காக எதுவும் செய்யாமல் வந்து விட்டேன். வீட்டிற்கு வந்து எங்கள் வீட்டில் இருந்த என் மகளிடம் நடந்ததை சொன்னேன். ஒரு ஐந்து நாட்கள் கழித்து எனது பெண்ணை அவரது கணவர் பேசி வீட்டிற்கு வரச் சொல்லி அவர் வீடான புளியம்பாக்கத்திற்கு சென்று விட்டார். இரண்டு மூன்று நாட்கள் கழித்து 14.02.2017 பகல் 1 மணிக்கு எனது மச்சான் கோவிந்தசாமி வாலாஜாபாத் வல்லம் பாக்கத்தை சேர்ந்தவர் எனக்கு போன் செய்து எனது மகள் இறந்து விட்டதாக தகவல் சொன்னார். நான் சுமார் நான்கு மணிக்கு நானும் எனது உறவினர்களும் என் மகளின் ஊரான புளியம்பாக்கத்திற்கு வந்து அவர் வீட்டில் பார்த்தேன். என் மகளைப் பார்த்த போது அவளை அடித்துப் போட்டு கீழே இறந்து போய் இருந்தார் அவர் கழுத்தில் தழும்பு இருந்தது அதனால் எனக்கு சந்தேகம் வந்தது. அதன் பிறகு எனது உறவினர்களை அழைத்துக்

கொண்டு வாலாஜாபாத் காவல் நிலையம் சென்று நான் புகார் அளித்தேன் அந்த புகாரை நான் சொல்ல சொல்ல எனது உறவினர்கள் எழுதினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்ரி ல் காட்டப்படும் கையொப்பம் என்னுடயது தான் அந்த கையொப்பம் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு எனது மகளின் உடலை போலீசார் கைப்பற்றி ஆம்புலன்ஸ் மூலம் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு மறுநாள் எனது மகளின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து என்னிடம் ஒப்படைத்தார்கள். எனது ஊரான சிதண்டி கிராமம் எடுத்துச் சென்று ஈமச்சடங்கு செய்தேன். அதன் பிறகு மூன்று மாதம் கழித்து காஞ்சிபுரம் ஆர்டிஓ அலுவலகத்தில் என்னை விசாரித்தார்கள் நான் நடந்த உண்மையைச் சொன்னேன். இது சம்பந்தமாக வாலாஜாபாத் போலீசார் டிஎஸ்பி என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை**

எனது பேத்தியின் பெயர் ருத்திக்தா. எனது பேத்தி ருதிதாவை எதிரி கண்ணன் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மனு ஒன்றை முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிமன்றம் காஞ்சிபுரத்தில் தாக்கல் செய்து தற்போது வரை நிலுவையில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் விவரங்கள் எனக்கு என் மைத்துனன் கோவிந்தசாமி தகவல் சொன்னதின் பெயரில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரியின் மீது காழ்ப்புணர்ச்சியின் காரணமாகத்தான் அவரின் மீது

பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும் எதிரி என்னுடையபெண்ணை நன்றாகத்தான் பார்த்துக் கொண்டார் என்றாலும் சரியல்ல. எதிரி கண்ணனுக்கும் என் மகள் இறந்ததற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.